செ.வெ.எண் : 286 நாள் : 29/3/2010


# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண். 19-A, ருக்மிணி லட்சுமிபதி சாலை (மார்ஷல் சாலை), எழும்பூர், சென்னை-600 008.

தொலைபேசி : ++91-044-2841 1376 / 2841 1378 / 2841 1379 தொலைநகல் : ++044-2841 1377

மின்னஞ்சல் : tnerc@nic.in இணையதளம் : www.tnerc.gov.in


எண்.3 / 2010
நாள். 18-3-2010

## பொது அறிவிப்பு

**தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்கட்டணம் மாற்றி அமைத்தல் மனு மீது பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம்**

தமிழ்நாடு மின்சார வாரியம், 1-4-2010 லிருந்து நடைமுறைக்கு வருமாறு நுகர்வோர் வகையினர் ஒருசிலருக்கு மின் கட்டணத்தை உயர்த்துவதற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனு தாக்கல் செய்துள்ளது. இந்த மனுவானது, மின் கட்டண மனு (TP 1/ 2010 ) ஆக ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம், இந்த மனு குறித்த சிறப்பியல்புகளை 26-2-2010 அன்று முன்னணி செய்தித் தாள்களில் வெளியிட்டுள்ளது. இந்த மனுவின் நகல் மண்டல மின் பகிர்மான தலைமைப் பொறியாளர் அலுவலகங்களிலும், சென்னையிலுள்ள தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் / வருவாய் அலுவலகத்திலும் பொது மக்களுக்கு கிடைக்குமாறு வழி செய்யப்பட்டுள்ளது மற்றும் ஆணையத்தின் இணையதளத்திலும் (www.tnerc.gov.in) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இணையதளத்திலும் (www.tneb.in) வெளியிடப்பட்டுள்ளது.

ஆலோசனை நடவடிக்கையின் தொடர்ச்சியாக, ஆணையம் கீழே உள்ள பட்டியலின்படி பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்த உள்ளது. இந்த நாட்களில் ஆர்வம் உடையவர்கள் ஆணையத்தின் முன்பு ஆஜராகி மறுப்புரைகளையும், கருத்துரைகளையும் எடுத்துரைக்கலாம். அவ்வாறு விருப்பம் உடையவர்கள் அந்தந்த நாட்களில் கூட்டம் நடைபெறும் இடத்தில் காலை 9.00 மணியிலிருந்து தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் :-

| தேதி மற்றும் நாள் | கூட்டம் நடைபெற உள்ள ஊர் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 30-3-2010 (செவ்வாய்க்கிழமை) | சென்னை | ராணி சீதை ஹால், 603, அண்ணா சாலை, (அண்ணா மேம்பாலம் அருகில்), சென்னை – 600 006. | காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை. |
| 8-4-2010 (வியாழக்கிழமை) | மதுரை | தமிழ்நாடு வணிகர் கழகம், பவள விழா ஹட்சன் அவைக்கூடம், காமராஜர் சாலை, மதுரை – 625 009 | காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை. |
| 13-4-2010 (செவ்வாய்க்கிழமை) | கோயம்புத்தூர் | நானி கலையரங்கம், மணி மேல்நிலைப்பள்ளி, பாப்பநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர் – 37 | காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| 15-4-2010 (வியாழக்கிழமை) | திருச்சி | தாஜ் கல்யாண மண்டபம், கரூர் புறவழிச்சாலை, (கலைஞர் அறிவாலயத்திற்கு எதிரில்), திருச்சி. | காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை. |

**வெளியீடு, இயக்குநர்:**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை-9.**

(இரா. பாலசுப்பிரமணியன்)
செயலாளர்